## தொழுகையில் இறையச்சம்

தொழுகை அல்லாஹ்வுக்கு முன்பு தலைவணங்கி ஆஜிராவதாகும். ஒரு
உண்மையான முஸ்லிம் தன்னுடைய இரட்சகனுக்கு முன்பாக நிற்கும்
போது, அல்லாஹ்வுடைய மகிமை மற்றும் மேன்மையின் காரணமாக
அவனுடைய இதயம் நடுங்க ஆரம்பிக்கின்றது. அசைவின்றி நிசப்தமாக
வும், அடிபணிந்தவனாக தன்னுடைய குற்றங்களைப் படம்பிடித்துக்காட்டு
வதுபோன்று அவற்றை நினைவு கூர்ந்தவனாக தன்னுடைய கண்களில் கண்
ணீர் வடிய, செயலற்றவனாக, இடிந்தவனாக, தன்மறுப்பான நிலையில்
தன்னை ஆட்கொண்டவனாக உணர்கின்றான். தொழுகைக்கான நேரம்
வரும்போது நான்காவது ஃகலிஃபாவான அமீருல் முஃமினின் ஹஜ்ரத்
அலி பின் அபீ தாலிப் (ர) அவர்களுடைய முகத்தின் நிறம் மாறிவிடும்.
அதன் காரணத்தைப்பற்றி அவர்களிடம் கேட்கப்பட்டபோது அவர்கள் கூறி
னார்கள்: வானங்கள் பூமி மற்றும் மலைகளிடம் அமானிதம் அளிக்கப்பட்ட
போது அவையனைத்தும் இந்தப் பாரத்தினை சுமக்க முடியாதென விலகி
நிராகரித்துவிட்ட அந்த அமானிதத்தை ஏற்று ஒப்படைக்கும் நேரம் வந்து
விட்டது, வலிமையற்றவனான நான் அதனை சுமந்துகொணடுள்ளேன்.
இந்த உணர்வு அமானிதத்தின் பாரத்தைதை சுமந்துகொள்ளும் நிலையில்
உருவாகின்றது.

பிரபல தாபியீயான ஹாதிம் அல் அஸம் (ரஹ்) அவர்களிடம் அவர்களு
டைய தொழுகையைப்பற்றிக் கேட்கப்பட்டபோது அவர்கள் கூறினார்கள்,
தொழுகைக்கான நேரம் வரும்போது நான் நல்ல முறையில் உதூ செய்து
கொள்கிறேன், எங்கு தொழுகை நிறைவேற்றவேண்டுமோ அந்த இடத்
திற்குச் சென்று அங்கே உட்கார்ந்து கொள்கிறேன், என்னுடைய உடல் மற்
றும் உறுப்புக்கள் அனைத்தும் தொழுகைக்காக ஆயத்தமாகிவிட்ட நிலை
யில் நான் தொழுகைக்காக எழுந்து நின்றுவிடுகிறேன், அப்போது என்னு
டைய பார்வைக்கு முன்னால் கஅபா வ்ந்துவிடுகின்றது, நான் ஸிராத்
பாலத்தில் நின்றுகொண்டிருப்பதாக நினைத்துக்கொள்கிறேன். என்னு
டைய வலது புறத்தில் சுவர்க்கமும் இடது புறத்தில் நரகமும் இருப்பதாக
வும் எனக்குப் பின்னால் மலகுல் மவ்த் நின்றுகொண்டிருப்பதாகவும்
நினைக்கிறேன் மற்றும் இது என்னுடைய கடைசி தொழுகையாக இருப்
பதாகவும் நினைத்துக்கொள்கின்றேன். நான் நம்பிக்கையுடனும் அச்சத்துட
னும் நிற்கிறேன் மற்றும் அல்லாஹ்வின் மகிமை மற்றும் வல்லமையை
மனதில் கொண்டு அல்லாஹு அக்பர் என்று கூறுகிறேன். தர்த்தீலுடன்
மெதுவாகத் திருக்ஃகுர்ஆன் ஓதுகிறேன் மற்றும் செயலற்றவனாக, இடிந்த
நிலையில் தன் மறுப்பான நிலையில் ருகூவிற்குச் செல்கிறேன், அதன்பின்
தூய மனதுடனும் இறையச்சத்துடனும் சஜ்தா செய்கிறேன், இடது காலைப்
படுக்க வைத்து அதன்மீது உட்கார்ந்துகொள்கிறேன், வலது காலை கட்டை

www.uzairfalahi.com

விரல் மீது தாங்கிய நிலையில் நிற்கவைத்துக்கொள்கிறேன். இந்தத் தொழு கையை அல்லாஹ்வுக்காக மட்டுமே தூயமனதுடன் நிறைவேற்றுகிறேன். ஏனெனில், இது ஏற்றுக்கொள்ளப்படுமோ இல்லையோ என்று எனக்குத் தெரியாத நிலையில்தான் நான் இருக்கின்றேன்.

* * *

www.uzairfalahi.com